முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,பொள்ளாச்சி

நாள் : 16.11.2023 இநிமாஎண்.39/2018 நிம.எண். 11/2017 மாசா1 பாப்பு (எ) ராமராஜ்

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>**

1) அசல்வழக்கில் எனக்கு அனுப்பப்பட்ட அழைப்பாணையை பெற்றுக் கொண்டேன் என்றால் சரியல்ல. அசல்வழக்கு 244/2011ல் 27.06.2011 அன்று தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் இல்லை.

2) அந்த தீர்ப்பின் அடிப்படையில் எதிர்மனுதாரர் தீர்ப்பாணை பெற்றவர் நிறைவேற்றுமனு எண்.6/2012 என்ற மனு தாக்கல் செய்திருந்தார் என்றும் அதிலும் எனக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு அதை நான் பெற்றுக்கொண்டு அம்மனுவில் நான் ஆஜராகவில்லை என்றால் சரியல்ல.

3) எதிர்மனுதாரருக்கு உடல்நிலை சரியில்லாததால் மேற்படி நிறைவேற்று மனு எண்.6/2012ஐ அவர் மேல் நடத்தாமல் விட்டு விட்டதால் தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

4) மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு இந்த நிறைவேற்று மனுவை எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட நிறைவேற்று மனுவில் எனக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டு அதை நான் பெற்றக்கொண்டேன் என்றும் தற்போது அந்த மனுவை பற்றி தெரியாது என்று பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) இந்த நிறைவேற்று மனு குறித்து எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் மரத்தை வந்து வெட்டியபோது தான் எனக்கு தெரியவந்தது. இம்மனுவை நான் எவ்வாறு தாக்கல் செய்தேன் என்றால் சொத்தை ஜப்தி செய்ய வந்தபோது தெரியவந்ததால் தாகசல் செய்துள்ளேன்.

6) எப்போது சொத்தை ஜப்தி செய்ய வந்தார்கள் என்றால் தேதி தெரியவில்லை. எப்போது அசல்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணை தெரிய வந்தது என்றால் சொத்தை ஜப்தி செய்ய வந்தபோது தான் தெரியவந்தது.

7) அசல்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையை ரத்து செய்யகோரி மனு எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தீர்ப்பாணையை ரத்து செய்ய மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

8) அசல் வழக்கு தாக்கல் செய்த விபரம் அதில் தீர்ப்பளிக்கப்பட்ட விபரம் பிறகு நிமஎண் 6/2012 தாக்கல் செய்யப்பட்ட விபரம் பிறகு இந்த நிறைவேற்று மனு எண்.11/2017 தாக்கல் செய்யபப்பட்ட விபரம் எனக்கு தெரியும் என்றும் அதில் நான் அழைப்பாணையும், அறிவிப்பையும் பெற்றுக்கொண்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

9) தற்போது எதிர்மனுதாரர் தீர்ப்பின் பலனை அனுபவிக்கஉ விடாமல் செய்யஉ வேண்டும் என்பதற்காக பொய்யான சங்கதிகளை கூறி இம்மனுவை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) இம்மனு சொத்து எனக்கு சொந்தமானது என்பதை காட்டுவதற்கு பத்திரம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது என்றும், பொய்யான மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**(எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)**

ஒப்பம் ( பாப்பு (எ) ராமராஜ் )